# அவசர மார்பகப் பிரிவு பரிந்துரைகளுக்காக நோயாளி குறித்த தகவல்கள்

## உங்கள் பொது மருத்துவர் ஏன் உங்களை அவசரமாக மருத்துவமனைக்குச் செல்லப் பரிந்துரைத்தார் என்பதையும் நீங்கள் செய்ய வேண்டியது குறித்தும் இந்தத் தகவல் தாள் விளக்குகிறது

**நான் ஏன் அவசரமாக மார்பகப் பிரிவுக்குச் செல்லப் பரிந்துரைக்கப்பட்டேன்?**
உங்கள் பொதுமருத்துவர் புற்றுநோய் இருப்பதற்கான சாத்தியத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக உங்கள் மார்பக அறிகுறிகளை மேலும் ஆய்வுசெய்ய வேண்டியிருக்கிறது என்று உணர்கிறார். உங்கள் பொது மருத்துவர் கூடியவரை விரைவில் நோயாளிகள் சிகிச்சையளிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக உள்ள தேசிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றியுள்ளார்.

**எனக்கு புற்றுநோய் உள்ளது என்று இதற்கு அர்த்தமா?**
அவசரப் பரிந்துரை என்பதால் உங்களுக்குப் புற்றுநோய் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவசரமாகப் பரிந்துரைக்கப்பட்ட பலருக்கு புற்றுநோய் இருப்பதில்லை. எனினும், நீங்கள் பரிந்துரைக்கப்பட்ட காரணம், உங்கள் மார்பக அறிகுறிகளைக் கண்டறிய உதவுவதற்காக ஒரு சிறப்பு நிபுணரை அல்லது சில பரிசோதனைகளை நீங்கள் விரைவாக எடுக்க வேண்டியுள்ளது. புற்றுநோய் கண்டறியப்படும் சூழலில், துவக்ககட்டத்திலேயே அது கண்டறியப்படுவது என்பது சிகிச்சையை மேலும் பலனுள்ளதாக்க வாய்ப்புள்ளது. எனவே, பரிந்துரைக்கப்பட்ட இருவாரங்களுக்குள் நீங்கள் சிகிச்சை எடுத்துக்கொள்வது முக்கியம்.

**நான் செய்ய வேண்டியது என்ன?**

- கைபேசி இருந்தால் அதன் எண் உட்பட சரியான முகவரியும் தொலைபேசி எண்ணும் உங்கள் பொது மருத்துவரிடம் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- **இந்தப் பரிந்துரை அவசரமானது. அடுத்த 14 நாட்களுக்குள் ஒரு சந்திப்பு நியமனத்திற்கு நீங்கள்** தயாராயிருப்பதை உறுதிசெய்யுங்கள். அடுத்த இரு வாரங்களுக்குள் உங்களால் சந்திப்பு நியானமனத்திற்கு வரமுடியவில்லை எனில், தயவுசெய்து உங்கள் பொதுமருத்துவரிடம் தெரிவிக்கவும்.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர், அணுகுவதற்கான தேவைகள் அல்லது பெண் ஆலோசகர் தேவையெனில், உங்கள் சந்திப்பு நியமனத்திற்கு முன்னதாகவே மருத்துவமனைக்குத் தெரியப்படுத்துங்கள்.
- உங்கள் அவசர சந்திப்பு நியமனத்திற்கு நீங்கள் ஒப்புக்கொண்டதும், அதில் கலந்து கொள்வது முக்கியம். இதனால் உங்களைக் கவனித்துக் கொள்வதில் தாமதம் ஏற்படாது.
- உங்கள் சந்திப்பு நியமனத்தின்படி வரமுடியவில்லை எனில் உடனடியாக மருத்துவமனைக்குத் தெரியப்படுத்துங்கள். இதனால் மாற்று ஏற்பாடு செய்ய முடியும்.
- இரண்டு முறை உங்கள் மருத்துவமனை சந்திப்பு நியமனத்திற்கு நீங்கள் வராவிட்டால், உங்கள் பொது மருத்துவரிடம் திருப்பி அனுப்பப்படுவீர்கள். இதனால் வேறொருவர் சந்திப்பு நியமனத்தைப் பெறமுடியும்.

**அடுத்து என்ன நிகழும்?**
மருத்துவமனைக்குள் உள்ள மார்பகப் பிரிவு உங்கள் சந்திப்பு நியமனம் குறித்து தபாலிலோ, தொலைபேசி மூலமோ அல்லது குறுஞ்செய்தியாகவோ தெரியப்படுத்தும். உங்கள் பொது மருத்துவரைப் பார்த்த ஒரு வாரத்தில் அவர்களிடமிருந்து தகவல் வராவிட்டால், உங்கள் பொதுமருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள். மாறாக, உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனைக் குறித்து உங்களுக்குத் தெரியுமென்றால், நீங்கள் அவர்களது நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்புச் சேவைகள் (PALS) துறையைத் தொடர்புகொள்ளலாம்.

ஆதரவுக்காக அல்லது உங்களிடம் மருத்துவக்குழு தெரிவிப்பதைப் புரிந்துகொள்வது குறித்த கவலை இருந்தால் நீங்கள் ஒரு நண்பரையோ அல்லது குடும்ப உறுப்பினரையோ உங்களுடன் அழைத்துவர விரும்பலாம். வருகையாளர்கள் குறித்த வழிகாட்டுதலுக்கு உங்கள் சந்திப்பு நியமனக் கடிதத்தைப் பார்க்கவும்.

**எனது சந்திப்பு நியமனத்தில் என்ன நிகழும்?**
மார்பக மருத்துவமனைக்கு நீங்கள் வரும்போது வரவேற்பறையில் நீங்கள் பதிவுசெய்ய வேண்டும். பின்னர் மார்பக நோய் சிறப்புநிபுணரான ஒரு மருத்துவர் அல்லது செவிலி உங்களைச் சோதிப்பார். உங்களுக்குக் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைக் கேட்டுக்கொள்வார். உங்கள் அறிகுறிகள் குறித்துக் கேட்டு, உங்களைப் பரிசோதித்துச் சில சோதனைகளுக்கு ஏற்பாடு செய்வார். நேர ஒதுக்கீட்டு நாளிலேயே அனைத்துச் சொதனைகளையும் எடுப்பதை மார்பகக் குழு நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே சந்திப்பு நியமனத்திற்கு மூன்றுமணி நேரங்களை நீங்கள் ஒதுக்க வேண்டியிருக்கும்.

உங்கள் வருகையில் மூன்று பகுதிகள் உண்டு:
1. உங்கள் அறிகுறிகள் குறித்து ஆலோசிக்கவும் உடல் பரிசோதனைக்கும் உங்கள் மருத்துவர் அல்லது செவிலியைச் சந்திப்பது.
2. மார்பு(கள்) படமெடுத்தல். தேவைப்படும் படமெடுக்கும் சோதனை வகை பொதுவாக வயதைப் பொறுத்தது. 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு இது மம்மோகிராம் (மார்பக எக்ஸ்ரே) மூலம் வழக்கமாகச் செய்யப்படும். அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் (மார்பைச் சுற்றி ஓடும் வெதுவெதுப்பான ஜெல்லிக்குள் நுண்ணாய்வு) கூடத் தேவைப்படலாம். 40 வயதுக்குக் கீழேயுள்ள பெண்களுக்கு, பொதுவாக அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மட்டுமே பரிந்துரைக்கப்படுகிறது. அரிதாக 40 வயதுக்குக் கீழேயுள்ள பெண்களுக்கும் மம்மோகிராம் தேவைப்படலாம்.
3. உங்கள் சோதனை மற்றும் படமெடுத்தல் முடிவுகளைப் பொறுத்து திசுச்சோதனை (மார்பக செல்கள் அல்லது திசுக்களின் சிறிய மாதிரி) எடுக்கப்படலாம். அந்த நாளில் இந்த நடைமுறைக் குறித்து மருத்துவர்/செவிலி உங்களுக்கு மேலும் விளக்கமளிப்பர்.

உங்கள் சந்திப்பு நியமனத்தின் போது இடுப்புக்கு மேல் ஆடை நீக்க வேண்டியிருக்கலாம். எனவே தனித்தனியாக மேல்சட்டையும் ஸ்கர்ட் அல்லது டிரவுசர் அணியும்படி பரிந்துரைக்கப்படுகிறது. டியோடரண்ட் மற்றும் டால்கம் பவுடர் மம்மோகிராமின் தரத்தைப் பாதிக்கக்கூடும். எனவே உங்கள் சந்திப்பு நியமன நாளில் தயவுசெய்து அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். மாறாக, மம்மோகிராம் தேவைப்பட்டால் அவற்றைக் கழுவிவிடலாம்.

**எனது முடிவுகள் எப்போது கிடைக்கும்?**
படமெடுத்தல் முடிவுகள் (மம்மோகிராம் மற்றும்/அல்லது அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்) பொதுவாக நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போதே கிடைத்துவிடும். திசுச் சோதனை இருந்தால், தோராயமாக மறு வாரத்தில் முடிவுகளைப் பெற திரும்ப வரும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

**ஏதேனும் கேள்விகள்?**
மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டது குறித்து ஏதேனும் கவலைகள் அல்லது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

**கூடுதல் தகவல்கள்**
நடைமுறைகள் மற்றும் சந்திப்பு நியமன விபரங்கள் குறித்த மேலும் விபரங்களுக்கு கீழேயுள்ள இணையதளத்தை நீங்கள் அணுகலாம் அல்லது 0808 800 6000 என்ற Breast Cancer Now உதவி எண்ணை அழைக்கலாம்.

**மார்பகப் புற்றுநோயப் பற்றி இப்போதே தெரிந்துகொள்ள** https://breastcancernow.org/information-support/facing-breast-cancer/mammogram-breast-ultrasound

இந்தத் துண்டுப்பிரசுரமானது லண்டன் நோயாளிக் குழு மற்றும் இலண்டனுக்கான உருமாறும் புற்றுநோய்ச் சேவைகள் குழுவினால் புதுப்பிக்கப்பட்டது.

NHS

**உங்கள் ஆய்வுகளுக்கும் முடிவுகளுக்குமான தோராயமான கால வரம்பு கீழே தரப்பட்டுள்ளது. உங்கள் அறிகுறிகள் சிக்கலானவையாகவோ அல்லது பல பரிசோதனைகள் எடுக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருந்தாலோ இவை கூடுதல் நாட்கள் எடுக்கலாம்.**

நோயறிதல் அல்லது புற்று நோய் விலக்கப்பட்டது
28 நாட்கள்

மருத்துவமனை சந்திப்பு நியமனம்
14 நாட்கள்

**பொது மருத்துவர் பரிந்துரை**

உங்கள் பொதுமருத்துவர் மருத்துவமனையின் மார்பகப் பிரிவுக்கு ஒரு மார்பகச் சிறப்பு நிபுணருடன் சந்திப்பு நியமனத்தைப் பெறவும் சில சோதனைகளை எடுக்கவும் பரிந்துரைக்கலாம்

**மருத்துவமனை சந்திப்பு நியமனம்**

உங்கள் பொது மருத்துவர் அல்லது மருத்துவமனை ஒரு சிறப்பு நிபுணருடன் அவசரச் சந்திப்பு நியமனத்திற்கும் உங்கள் சந்திப்பு நியமனத்திற்குமான அறிவுறுத்தல்களுக்கும் ஏற்பாடு செய்யும். இந்தச் சந்திப்பு நியமனத்திற்குத்

உங்கள் அறிகுறிகளையும் முடிவுகளையும் ஒரு மார்பகச் சிறப்பு நிபுணருடன் ஆலோசிப்பதற்காக உங்கள் சந்திப்பு நியமனம் இருக்கும். உங்களுடன் ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது நண்பரை நீங்கள் அழைத்து வரலாம்

**கூடுதல் ஆய்வு**

உங்கள் அறிகுறிகளுக்கான காரணத்தைத் தீர்மானிக்க மார்பகக் குழு சில சோதனைகளுக்கு ஏற்பாடு செய்யும். சந்திப்பு நியமன நாளிலேயே அனைத்துச் சோதனைகளையும் செய்யப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கூடுதல் பரிசோதனைகளாக மம்மோகிராம், அல்ட்ரா சவுண்ட் மற்றும்/அல்லது திசுச் சோதனை இருக்கலாம்

**முடிவுகள்**

படமெடுத்தல் முடிவுகள் பொதுவாக நீங்கள் மருத்துவமனையில் இருக்கும்போதே கிடைத்துவிடும்.

திசுச் சோதனையைப் பொறுத்தவரை தோராயமாக மறு வாரத்தில் முடிவுகளைப் பெற திரும்ப வரும்படி நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

**புற்றுநோய் கண்டறியப்பட்டது**

மார்பகப் புற்றுநோய் கண்டறியப்பட்டதை உங்களுக்குத் தெரியப்படுத்தவும் சிகிச்சைக் குறித்து விவாதிக்கவும் உங்கள் மார்பகச் சிறப்பு நிபுணர் உங்களைத் தொடர்புகொள்வார்

உங்கள் புற்றுநோய் சிகிச்சைக் குழுவும் உங்கள் பொது மருத்துவரும் என்ன எதிர்பார்க்கலாம், சிகிச்சையைத் தொடங்கும்போது கூடுதல் ஆதரவை எங்குப் பெறலாம் என்பது குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள்

**புற்றுநோய் இல்லையென கண்டறியப்பட்டது**

உங்கள் மார்பகச் சிறப்பு நிபுணர் புற்றுநோய் இல்லையென உறுதிசெய்யப்பட்டதையும் அடுத்து என்ன நடக்கும் என்பதையும் தெரியப்படுத்த உங்களுக்கு எழுதுவார்.

இப்போதும் பரிசோதிக்க வேண்டிய அறிகுறிகள் உங்களிடம் இருக்கலாம். அவை தொடர்ந்தால் அல்லது மேலும் தீவிரமடைந்தால் நீங்கள் உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ள வேண்டும்

சிகிச்சையளிக்கும் முடிவு
31 நாட்கள்

முதல் சிகிச்சை
62 நாட்கள்